Literacy for a Billion

Movie: Sooriya Nagaram
Year: 2005

Song: Unnai pirivona kanna
Lyricist: Vairamuthu

உன்னை பிரிவேனா கண்ணே
உன்னை பிரிவேனா
உன்னை பிரிவேனா கண்ணே
உன்னை பிரிவேனா
உனக்கென வந்தவள் நானடா
என் உயிர்மேடையில் நீயடா
வாசமாய் இருந்தால்
பூவை பிரியலாம்
சுவாசமாய் வந்தாய்
எங்கனம் பிரிவது

உன்னை பிரிவேனா அன்பே
உன்னை பிரிவேனா
உன்னை பிரிவேனா அன்பே
உன்னை பிரிவேனா
உனக்கென வந்தவன் நானடி
என் உயிர்மேடையில் நீயடி
வாசமாய் இருந்தால்
பூவை பிரியலாம்
சுவாசமாய் வந்தால்
எங்கனம் பிரிவது

என் கண்ணை திறந்து பார்
நீ இருப்பாய்
என் காதல் திறந்து பார்
நீ இருப்பாய்
என் நெஞ்சை திறந்து பார்
நீ இருப்பாய்
என் நிழலை திறந்து பார்
நீ இருப்பாய்
என்னை திறந்து பார்
நீ இருப்பாய்
என் எண்ணம் திறந்து பார்
நீ இருப்பாய்
உள்ளம் திறந்து பார்
நீ இருப்பாய்
என் உயிரை திறந்து பார்
நீ இருப்பாய்
கடலும் நதியும் கலந்த பின்பு
நீரும் நீரும் பிரிவதேது
உயிரும் உயிரும் சேர்ந்த பின்பு
உடல்கள் இரண்டும் பிரிவதேது

உயிரில் விழுந்த சர்க்கரையே
உள்ளங்கையின் முக்கனியே
இருந்தால் உனக்கு உறவாவேன்
என்னை உன் சிதைக்கு
விறகாவேன்
சாதி சனங்கள் வெறுத்தாலும்
சமூக உறவுகள் பிரித்தாலும்
கொட்டிக் கிடக்கும் உறவை
யாரும் தட்டி பறிக்க முடியாதே
கட்டித்தழுவி கிடக்கும் நம்மை
வெட்டி எடுக்க முடியாது
உன்னை பிரிவேனா அன்பே
உன்னை பிரிவேனா
உனக்கென வந்தவள் நானடா
என் உயிர்மேடையில் நீயடா
வாசமாய் இருந்தால்
பூவை பிரியலாம்
சுவாசமாய் வந்தாய்
எங்கனம் பிரிவது

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.